திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்கள், கேள்வியி ல * * என்ற அந்தப் பகுதியை எடுத்துவிட வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The question may be expunged, as it is not in good taste. It may be off the record.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) மேட்டூர் டவுன்சிப் குடிசைவாழ் மக்கள் மீது நடவடிக்கை

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு திரு சுரேந்திரன் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதில்—

"மேட்டூர் டவுன்சிப்புக்குட்பட்ட பகுதியில் குடிசை போட்டு குடியிருக்கும், சுமார் 300-க்கு மேற்பட்ட ஏழைக் குடும்பங்கள் மீது, மேட்டூர் டவுன்சிப் கமிட்டி கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்து, தண்டனை வாங்கித் தருவதற்கான நடவடிக்கை எடுத்தது என்ற அவ சர, அவசியமான விஷயத்தை விவாதிக்க பேரவையின் நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டும்" என்று கோரியிருக்கிறார்கள்.

இது அரசின் அன்றாட அலுவல்களுக்கு உட்பட்ட நிகழ்ச்சியாக இருப்பதாலும், மேலும் மாண்புமிகு உறுப்பினர் நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு இருப்பதாலும், அப்பொழுது இதைப்பற்றிக் கூறுவதற்கு இடம் இருப்பதன் காரணமாகவும் இதற்கு நான் அனுமதி மறுக்கிறேன்.

(ஆ) தஞ்சை மாவட்டம் களத்தூர் கிராம விவசாயத் தொழிலாளர் அல்லலும் பாதுகாப்பு நடவடிக்கையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு ஆ. கு. சுப்பையா அவர்கள், "தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலம் தாலுக்கா களத்தூர் கிராமத்தில், 30 குடும்பங்களைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளர்களை அடித்தும், அவர்களுடைய பண்ட பாத்திரங்களைப் பறிமுதல் செய்தும், ஊரைவிட்டு விரட்டியும் அவர்கள் சாகுபடி செய்திருந்த நிலங்களில் விளைந்திருந்த நெல்லை அறுவடை செய்து கொண்டதாலும், பாதிக்கப்பட்டவர்களை குடியமர்த்தவும், அவர்களின் உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கவும் வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க வேண்டும்" என்ற ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இது எந்த அளவுக்கு இந்த அவையினுடைய நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து, விவாதிக்கக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதுபற்றி மட்டும் அவர்கள் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : கடந்த சில வாரங்களுக்கு முன்னால், நன்னிலம் தாலுக்கா, களத்தூர் கிராமத்தில் அரிசன விவசாயிகள் விவசாயம் செய்திருக்கக்கூடிய தானியத்தை, நெல் உற்பத்தியாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அந்த விவசாயிகளை ஊரைவிட்டு விரட்டி, 100 ஏக்காரவில் விளைந்திருக்கக்கூடிய 3,000 கலம் நெல்லை எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள். ஆகவே, பாதிக்கப்பட்ட விவசாயிகள் மீண்டும் அந்த ஊருக்குக் குடியேறுவதற்கு அச்சம் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் போதுமான பாதுகாப்பு அளித்து, மீண்டும் அவர்களை அங்கே குடியேற்றுவதற்கு வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் இந்த சபையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.